ஓம்

ஞானோதயம்.

பிரம்மஞான மாதாந்தரப் பத்திரிகை.

பத்திராதிபர்கள்

அ. ரங்கஸ்வாமி ஐயர் பி. ஏ., பி. எல்., மதுரை.

வி. விசுவநாதய்யர் பி. ஏ. பி. எல், மதுரை.

தொகுதி 15] 1925-௵ ஜனவரி 21 [பகுதி

தற்கால நிலைமை.

பிரஹ்மஞான சபையின் 49-வது வருஷ மஹோத்ஸவமென்ற ர்வென்ஷனானது பம்பாய் நகரில் 1924-ம் ௵ டிசம்பர் ௴ 24௳ தல் 28௳ வரை நடைபெற்றது. பிரஹ்மஞான சபையோடு துணைமுற்று நிற்கும் இயக்கங்களும் 23௳ முதல் 30௳ வரை அங்கு கூடின. அதற்கு முன் அதாவது 1924-ம் ௵ டிசம்பர் ௴ 1? ௳ முதல் 22-ம் ௳ வரை டாக்டர் பெஸண்டு அம்மையார் ரியதரிசியாயுள்ள நாஷனல் கன்வென்ஷன் சபையானது அதில்கூடி Common wealth of India Bill என்ற ஒரு தா சட்டத்தின் அம்சங்களைக் கோடிகரித்தது. அம்மசோ ட்டத்தின் அமைப்பானது அச்சிடப்பட்டு பொது ஜன பரி யில் வெளியிடப்படும் பற்பல அபிப்பிராயங்களை ஆராய்ந்து

நாஷனல்கன்வென்ஷனால் அம்மசோதா சட்ட அமைப்பானது புனராலோசனை செய்யப்படும். அதின் பிறகு வெளிப்படுத்தப் படும் மசோதாவானது இந்தியர்களின் கருத்திற்கு இசைந்ததெனக் கொள்ளப்படும். அதின் பிறகு அது பார்லிமெண்டு சட்டங்களை நிர்மா[…] செய்வதில் தேர்ச்சியடைந்த நிபுணர்களால் ஒழுங்கு படுத்தப்பட்ட பிரிட்டிஷ் பார்லிமெண்டு சபையில் 1925-ம் வருஷத்தி னிடையில் பிரேரணை செய்யப்படுமெனத் தோன்றுகிறது.

* * *

இம்மசோதா சட்டத்தின் லக்ஷணங்களில் முக்கியமானது யாதெனில் இந்திய நாகரீகத்தின் வழியாக நவீன ஜனநாயகம் என்ற ஆட்சி முறையை சிறப்பிக்கும் சில அம்சங்களாம். வைவஸ்வத மனுவால் நிர்மிக்கப்பட்ட ஆளுகை முறையில் புருஷன், ஸ்திரீ மக்கள், என்ற மூன்று அங்கங்களோடு கூடின குடும்பமானது தேச[…]த்த அடிப்படையாக உள்ளது. இவ்வித பலகுடும்பங் கள் சேர்ந்து ஒரு[…]ய், பலகிராமங்கள் ஒருதாலூகாவாக இக் காலத்தில் அமைக்கப்பட்டு, பல தாலூகாக்கள் ஒரு ஜில்லாவாக ஆகி பல ஜில்லாக்கள் சேர்ந்து ஒரு மாகாணம[…]ன விளங்கி, பல மாகாணங்கள் கூடினது நமது இந்தியாதேசம். கிராம ஆளு[…] பல்லாயிரம் ஆண்டுகளாக கிராம வாசிகளின் நன்மையைக் கே[…] கிராமத்தார்களுக்கு உள்ளடங்கி நடந்தேறியதால், இந்திய நாக[…]மும் நீண்டகாலமாக சீர் குலையாமல் நிலை நின்று வந்தது. எப்[…]ழுது இக்கிராம ஆளுகையானது ஈஸ்டு இந்தியா கம்பெனியி[…] ஆளுகையில் பலங்குன்றி சீர் கேடு அடைந்ததோ அப்பொ[…]தான் இந்தியஜனஸமூகங்களின் முன்னேற்றமும் தடை[…] அவர்களுக்குப் பின்னேற்றமும் உண்டாயிற்று.

* * *

இம்மசோதா சட்டத்தில் இந்திய நாகரீகத்தின் கண்[…]ரின் தத்துவமாகிய அறிவிற்குரிய உத்திரவாதம் என்பதே உ[…] படுகின்றது. அதாவது கிராம ஆளுகை, தாலூகா ஆளு[…] ஆளுகை, மாகாண ஆளுகை, தேச ஆளுகை என்று

[illegible]ங்கும்

மேல் உயர்வுற்று நிற்கும் ஆளுகைகளின் அதிகாரங்கள் ஒன்றிற்கு மேல் மற்றொன்று விசாலம் பெற்று நின்றும், அவ்வதிகாரங்களை கொண்டு செலுத்தும் 'வோட்டர்களின்' யோக்கியதைகள் அவ்வித மாகவே கீழ்ப்படையில் அற்பமாய் விளங்கி மேற்செல்லச்செல்ல உயர்வு பெற்று நிற்கின்றன.

* * *

டிசம்பர் மீ 23-ம் உயில் பம்பாய் Elphinstone High School என்ற வித்தியாசாலையில் அற்புத சித்திரீய காட்சி ஒன்று ஏற்படுத்தப்பட்டு விநோதமான படங்கள் அக்காட்சியில் விளங்கி மனதிற்கு ரம்மியத்தை உண்டு பண்ணின. பிரம்மஞான சபையின் அக்கிராசனர் அன்று மாலையில் அக்காட்சியைத்திறந்து அச்சபை பிரதிநிதிகளையும் மற்றகனவான்களையும் சிற்றுண்டிகளால் உபசரித்து அவர்களோடு சல்லாபம் செய்தனர்.

* * *

24, 25, 26, 27உ களில் தேசிய வாழ்க்கைக்கு பிரம்மஞானம் அடிப்படையான ஏகவஸ்து என்ற பொது விஷயத்தை நான்கு பாகங்களாகப் பிரித்து அக்கிராஸனராகிய டாக்டர் [illegible] அம் மையார் தேசவாழ்க்கையில் உள்ள நித்திய நி[…]ப்பற்றி யும், ஸ்ரீமான் J. கிருஷ்ணமூர்த்தியவர்கள் ஈசுவர [illegible] நடாத்தும் தேசவாலியைப்பற்றியும், லேடி எமிலி லுட்டியென்ஸ் துரைஸாணியார் 'சகோதர பாவம் உண்மையானது' என்பதைப் பற்றியும், உபஅக்கிராஸனாதிபதியாகிய ஸ்ரீமான் C. ஜினராஜ தாஸரவர்கள் தேசத்தின் அத்யாத்ம அமைப்பு என்ற விஷயத்தைப் பற்றியும் உபந்யாசம் செய்தனர். தவிரவும் உதய நக்ஷத்திர மீட்டிங்குகளும் கல்வி சம்மந்தமான மீட்டிங்குகளும் நடைபெற்றன.

* * *

ஸ்ரீமான் J. கிருஷ்ணமூர்த்தி அவர்களுடைய பல உபந்யாஸங்களிலும் துரிதமாய் நடைபெற வேண்டிய மாறுதல்களைப்பற்றி அவர் வற்புறுத்தினர். அம்மாறுதல்கள் நம்முடைய மனோபாவங்களி

லும் நம்முடைய கிரியைகளிலும் அன்பையே கருவியாகக் கொண்டு ஏற்படவேண்டும். ஜகத்குருவானவர் உலகில் மானிடர்கள் முன் விளங்குமுன்னர் இம்மாறுதல்கள் ஏற்படவேண்டும். புத்தி சாதுரியத்தாலாவது, பல கிரந்தங்கள் கற்றலாலாவது, யோகநிஷ்டைகளாலாவது, வெளிப்படையாய் பக்திமட்டும் காட்டுவதாலாவது இம்மாறுதல்கள் ஏற்பட மாட்டாது. ஒவ்வொருவரும் பிரஹ்மஞானத்தில் பெற்ற அறிவை தன் குடும்பத்தில் உபயோகப்படுத்த வேண்டும். தன்னுடைய மனைவிமக்கள் ஏவலாளர் முதலியவர்களிடத்தில் அன்பு பாராட்டி அவர் அவர்களுடைய ஆத்மகம்பீரத்தை அதிகரித்தல் வேண்டும். குரூரத்தைக்கொண்டு நிற்கும் கல்விமுறைகளைத்தவிர்த்து, அன்பை அனுஸரித்து நிற்கும் கல்வி முறையை பரவச்செய்ய வேண்டும். இந்தியர்களின் முன்னேற்றத்திற்கு தடையாய் நின்று, ஸ்திரிகளையும் கீழ்ஜாதியோர்களையும் அமுக்கிக் கொண்டிருக்கும் வழக்கங்களையும் ஆசாரங்களையும் கிரியைகளையும் நிராகரிக்கவேண்டும். நமக்கு இது வரை பிரஹ்மஞான சபை வழியாய் வெளியிடப்பட்டிருக்கும் ஞானவிஷயங்கள் நம்மால் இன்னும் அனுஷ்டானத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. அப்படி அனுஷ்டானத்திற்கு கொண்டு வருவதே நம்முடைய முக்கிய காரியமாகும். நம்முடைய கிரகங்களிலும் ஆலயங்களிலும் நம்முடைய ஊர்களிலும் அசுத்தங்களையும் அசுத்தங்களால் உண்டாகும் வியாதிகளையும் கஷ்டங்களையும் குறைத்துக்கொண்டு வருகிறோமா? நாம் சோம்பலையும் பிரமாதத்தையும் ஒழித்து நம்முடைய சரீரத்தை சுத்தமாய் வைத்துக்கொண்டு நம்முடைய மனோபாவங்களை அழுக்கறச்செய்து பிறர்சேவையையும் பரோபகாரத்தையுமே லக்ஷியமாகக்கொண்டிருக்கிறோமா? பஹிஷ்கிரியைகளைக் கணக்கற்றவைகளாகச் செய்து அவைகளை அவலம் பித்துக்கொண்டு நிற்பது பிரயோஜனமற்ற வழியாகும். அது ஜகத்குருவின் வருகைக்கு உதவி எத்தனம் செய்யமாட்டாது. ஒவ்வொரு உதயநக்ஷத்திர அங்கத்தினரும் அவரவர் வஸிக்கும் இருப்பிடத்தில் ஜகத்குருவின் பிரதிநிதியாகவும் முன்னோடியாகவும் நின்று அப்பிரதேசத்தில் நிகழும் துராசாரங்களையும் கெட்ட வழக்கக்கங்களையும் அவிவேகத்தையும் மாற்ற வேண்டும். அப்படிச்செய்தலே அவர் வருகையை விரைவு செய்யும் வழியாம்.

* * *

ஸ்ரீமான் J. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் மதனப் பள்ளியில் Theosophical University என்ற பிரஹ்மஞான சர்வகலாசாலை ஒன்று ஸ்தாபிக்க வேண்டுமெனக் கருத்துடன் சிலமெம்பர்களைக் கூட்டுவித்து தம் அபிப்பிராயத்தை வெளியிட்டனர் ஒரு ஆங்கில மாது அதற்கு 6000 பவுன் வரை மூலதனமாக நன்கொடையிட்டு, சில வருஷங்கள் வரை வருஷவரும்படி அளிப்பதாகவும் வாக்களித்திருக்கின்றனர். அந்த மீட்டிங்கில் அங்கு விஜயம் செய்தோரில் சிலர் சுமார் 35000 ரூ வரை நன்கொடை செய்வதாக வாக்குறுதி கூறினர். அச்சர்வகலா சாலையை ஸ்தாபிக்கவும், அதற்குரிய கட்டிடங்களை அமைக்கவும் விரைவில் தீவிரமான முயற்சி எடுக்கப்படும். அவ்வரிய காரியத்தில் நாமெல்லாரும் உற்சாகம் கொண்டு நம்மாலியன்ற கைங்கரியத்தை செய்ய வேண்டியது நமது கடமையாகும். அவரது தலைமையின் கீழ் அவரால் வற்புறுத்தப்பட்ட அனுஷ்டான விதிகள் நமது நாடெங்கும் கைக்கொள்ளப்பட்டு நாளது 1925-ம் வருஷத்தில் பல முயற்சிகளால் உருவங்கொண்டு வெளித்தோன்றி நமது முன்னேற்றத்தை உண்டு பண்ணுமென்று நம்புகிறோம்.

ஆர். ரெங்கசாமி அய்யர்.

புனர் ஜன்மம்

புனர் ஜன்ம கதி

இக்கதியின் ஆனுகூல்யம்.

(186-வது பக்கத்திலிருந்து தொடர்ச்சி.)

இதென்ன பெரும் கஷ்டகதியென்று ஒருவரும் நினைக்கலாகாது. ஏனெனில் ஒரு ஜீவாத்மாவுக்கு அனுபவங்களும் ஞானங்களும் முற்ற முற்ற அவனது சரீரங்களும் மாறவேண்டியே வருகிறது.

எப்படி யொருவன் கிழிந்துபோன உடைகளை எறிந்து விட்டு புதிதான உடைகளைக் கிரகிக்கிறானோ அப்படியே ஜீவாத்மா ஜீர்ணமாகப் போய்விட்ட பழைய சரீரங்களை விலக்கிவிட்டுப் புதிய சரீரங்களைச் சம்பாதித்துக் கொள்ளுகிறான். இதில் கவனிக்கவேண்டியது என்னவென்றால், விடப்பட்டசரீரங்கள் எப்போதும் ஜீர்ணித்து உபயோகமற்றவைகள். புதிதாய்க்கிரகித்துக் கொள்ளப்பட்ட சரீரங்கள் உபயோக முள்ளவைகள். நழுவவிடப்பட்ட சரீரங்களைக் காட்டிலும் புதிதாய்க் கிரகிக்கப்பட்ட சரீரங்கள் "நவதரம், கல்யாணதரம், அவித்யாரகிதம், என்று பிருஹதாரண்ய கோபநிஷத்து முறையிடுகின்றது. எப்படியொரு வார்ப்புத்தட்டான் ஒரு பெரிய தங்கக்கட்டியிலிருந்து ஒரு துணுக்கை யெடுத்து நூதனமான அழகு பொருந்திய ரூபத்தை வார்க்கின்றானோ அப்படியே ஜீவாத்மா பிதிருலோக, காந்தர்வலோக தைவலோகப்பிராஜாபத்யலோக பிரம்மலோகாதிலோகங்களிலிருக்கிற பஞ்சபூதங்களிலிருந்து ஒரு அம்சத்தை யெடுத்து அவித்தையைப்போக்கடித்து, நூதனமாயும், அழகாயுமிருக்கிற வேறு தேகத்தைச் செய்து கொள்ளுகிறான். ஆகையால் இவ்விதம் சரீரங்களை கிரகித்துக்கொண்டே யிருப்பது வீணாகாது. மேலும் மேலும் உத்கிருஷ்டமான சரீரங்களை யெடுக்க வெடுக்கப் புதிது புதிதான அனுபவங்களும் ஞானவிசேஷங்களும் அனந்தமான சக்தி விகாஸங்களும் உண்டாவதற்குக் காரணமாதலால் அவ்விதமான சரீரக்கிரகணம் ஸம்வித்விகாஸத்திற்கு இன்றியமையாத வழியாகிறது.

இக்கதி எவ்வளவு காலம்

இப்படிப் பிறப் பிறப் பென்னும் சகடத்தில் மாட்டிக்கொண்டு எத்தனை காலம் உழல்வது என்றால், எத்தனை காலம் காமவசனாய் ஜீவாத்மா இருக்கின்றானோ, எத்தனை காலம் ஈசுவராஞ்ஞையைத் தெரிந்து கொண்டு நடக்காமலிருக்கிறானோ, அத்தனை காலமும் என்று தான் ஏற்படுகின்றது.

காமாதுரன் ஒருவன் அவனது மனது எதில் படிந்து இருக்கிறதோ அந்த லிங்கத்தை அதற்கனுகுணமான கிரியைகளால் அடை-

கிறான். இந்த லோகத்தில் என்னென்ன காரியங்கள் செய்திருப்பானோ அந்தக் கிரியைகளின் பயனை அந்தந்த லோகங்களில் அடைந்து பிறகு இந்த லோகத்திற்கே மறுபடியும் வந்து சேருகிறான். காமமுள்ளவனுடைய ஸம்ஸாரயின்கதி இதுவே. காமமற்றவனே அகாமன், நிஷ்காமன், ஆப்தகாமன், ஆத்மகாமன். இவனுக்குப் பிறப்பிறப்பில்லை. பிரம்மமாகி அதனை யடைகின்றான்" என்று பிருஹதாரண்ய கோபநிஷத்தில் வர்ணித்திருக்கின்றது. இதே கருத்தைக்கடோபநிஷத் 6ம் வல்லியில் "ஒருவனுடைய ஹிருதயத்தில் ஒட்டிக்கொண்டிருக்கும் காமங்கள் எல்லாம் விலகிய பொழுது அந்த மிருதன் அமிருதனாகின்றான் பிரும்மத்தையும் அனுபவிக்கின்றான்". என்று கூறியிருக்கிறது. இந்தக்கருத்தையே கீதாசாரியனும், "யுக்தனொருவன் கர்ம பலத்தைத் தியாகஞ் செய்து விட்டு நிரந்தரமான சாந்தியை யடைவான் காமத்தால் தூண்டப்பட்ட அயுக்தனொருவன் கர்மபலத்தில் ஆசை கொண்டவனாய் ஸம்ஸார சக்ரத்திற் கட்டுண்டு கிடப்பான்". என்றார். ஆதலால் ஈஷணாத்திரயங்களையும் விலக்கி வைராக்கிய சம்பன்னனாக ஆவதற்கு வேண்டிய வழியைத் தேடவேண்டியிருக்கிறது. அதற்காகவே தான் இந்தப் புனர் ஜன்மகதியும் அவசியமாகவிருக்கிறது.

புனர் ஜன்மம் அவசியம்

அஞ்ஞானகிய ஜீவாத்மா மிருகப்ராயமான காட்டுமிராண்டியாகவிருந்து, பிறகு நாகரீகமான மனிதனாகவாகி அதற்குப்பிறகு நிவிருத்தி மார்க்கத்திற் பிரவேசித்துச் சற்குண சம்பன்னனாக வளர்ந்து அதன் மேல் மோக்ஷமார்க்கத்தின் படிகளைக் கடந்து, அவிக்ஷனாக வேண்டும். இதுவே அவனுக்கு வழி. இத்தன்மையான ஒரு பெரிய காரியத்தை ஒரு ஜன்மத்தில் முடித்து விடலாமா? முடியாதலால் பல கோடி ஜன்மங்கள் அவன் எடுக்க வேண்டியதாகிறது. செய்து கொள்ளவேண்டிய அபாரமான வேலைக்கு உயர்ந்தால் நூறுவயதாவுள்ள ஒரு புருஷாயுஸு எம்மாத்திரம்? ஸம்வித்ரூப விகாஸ முறையிலோ கணக்கிறந்த படித்தரங்களிலிருக்கின்றன. ஒன்றுமில்லாத எஸ். எஸ். எல். ஸி பரீக்ஷையில் தேறுவதற்கே ஒருபையன் அடி

முதல் துனிவரையில் கிளாஸ் கிளாஸ் ஆக ஒரு வருஷமும் தவறுதலில்லாமற் படித்தால் பத்து வருஷம் படிக்கவேண்டியிருக்கிறது. சில தவறுதல் ஏற்பட்டாலோ வருஷம் பதினைந்தோ பதினாறோ? ஆகவே ஒரு ஜீவன் முக்தனாகவும் மகாத்மாவாகவும் ஆவதென்றால் அது ஜனோலோக பரியந்தம் எட்டும்படி வைத்த ஸம்வித்ரூப விகாஸம் என்னும் ஏணியல்லவோ? இதற்கு எத்தனை ஜன்மாந்தரங்கள் வேண்டும்? மேலும் எப்படி ஒரு பையன் ஒரு வகுப்பில் தேர்ந்து விட்டானாகில் மறு வருஷம் புதிதாக வேறு வகுப்பு ஏற்பட்டபோது அதிற் போய்ச் சேர்ந்து படிக்க வேண்டியவனாக விருக்கிறானோ, அதைப்போல ஒரு ஜீவாத்மா ஜன்மாந்தரங்கள் தோறும் புதிது புதிதான சரீரங்களைக் கிரகிக்கிறான். பல படித்தரமான ஸம்வித்ரூப விகாஸத்திற்குப் பல தேசங்களிலும், பல ஜாதிகளிலும், பல வர்ணங்களிலும், பல காலங்களிலும், பலரூபங்களிலும், பல குடும்பங்களிலும், ஆணாகவும், பெண்ணாகவும், பல பல ஜன்மங்கள் எடுக்க வேண்டியிருக்கிறது.

ஜீவாத்மா நித்யன், அம்ருதன், என்று நினைக்கும் ஆஸ்திகபுத்தியுள்ளவர்கள் புனர் ஜன்ம விஷயத்தில் சந்தேகங் கொள்ள மாட்டார்கள். பிறப்பதற்கு முன்னும் இறப்பதற்குப் பின்னும் இல்லாமற் போனால் ஜீவாத்மா எப்படி நித்யனாவான்? ஒரே ஜன்மந்தான் எடுக்கிறான் என்றுஞ் சொல்லமாட்டார்கள். ஏனெனில் இவ்வளவு சிறிய காலம் பூலோகத்தில் தங்கும் ஒரு ஜன்மத்திலா ஜீவாத்மா சகல புருஷார்த்தங்களையு மடைந்து கல்யாணகுணஸமூக சம்பன்னனாக முடியும்? ஜன்மமெடுத்தவன் இறப்பது நிச்சயம், இறந்த ஜீவாத்மா முக்தனாகி விட்டாலொழிய அவசனாகப் பிறப்பதும் நிச்சயம் என்றே கருதுவார்கள்.

நித்ய நிலையிலுள்ள ஜீவாத்மாவை ஓர் அசுவத்த மரத்திற்குச் சமானமாக வைத்துக்கொண்டால், இலையுதிர் காலந்தோறும் அம்மரம் தனது இலைத்திரளையுதிர்த்துமொட்டையாகநிற்பதைப் போல ஜீவாத்மா தனது நிர்யான காலத்திற்குப் பிறகு தனது சரீரங்களான பர்ணங்களை யுதிர்த்து விட்டு நிர்மாணமாகச் சிறிது காலம் நிற்கி

[illegible] பிறகு வசந்த கால வாரம்பத்தில் எப்படி அந்த அசுவத்தம் மறுபடியும் இலைகளை வெளிக்காட்டி அவைகளால் மூடப்பட்டு கண்ணுக்கு வளப்பாகத் தோற்றுகிறதோ, அதைப்போல புனரபி ஜீவாத்மா தனது கோசங்களை வகித்துப் பூலோகத்தில் யாவருங் காண உலாவுகின்றான். இதிலோ ரதிசயமுமில்லை! பிரபஞ்சத்தில் இயற்கை யமைப்பிலுள்ள ஒவ்வொரு ஜன்யமான வஸ்துவும் பிறந்து பிறகு நசித்து புனரபி ஜனிப்பதை நாம் தினந்தோறும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். ஆதலால் ஜீவாத்ம விஷயத்திலும் அதுவே நியாயமான கதி என்று நினைப்பதில் யாதொருதோஷமுமில்லை.

மனுஷ்ய வாழ்க்கையில் நாம் காணும் பலவிதமான விசித்திரங்கள், வித்யாசங்கள், ஸுகதுக்கங்கள், ஞானாஞான நிலைகள் நமது மனதை மோஹிக்கச்செய்து 'இது இன்னது' என்று தோற்றாமல் கிலேசப்படும்படி செய்கின்றனவே? அவைகளுக்குக் காரணத்தைக் கற்பித்து நமக்கு மனச்சமாதானத்தைத் தரக்கூடிய யுக்தி இந்தப்புனர் ஜன்மகதியேயன்றி வேறில்லை. சில வேறு காரணங்களை பல பேர் பலவழிகளாலெடுத்துக் காட்டுவார்கள் ஆயினும் அவைகள் மனஸுக்குச் சம்மதமான காரணங்களாகத் தோற்றவில்லை. நித்யனான ஜீவாத்மா ஒருவனிருந்து புனர் ஜன்மங்களையெடுத்துக்கொள்ளுகிறான் என்ற ஞானத்தில் நமக்கு ஆஸ்திக புத்தியுண்டாய் விட்டாலோ பலவிதமான சந்தேகங்களும் விபரீதமான எண்ணங்களும் தீயிற்பட்ட பஞ்சு போற் பறந்துபோகின்றன.

"கண்கண்டதே காட்சி" என்னும் சில மேல்நாட்டு வித்வான்களும், அவர்களைப்பின் பற்றிவரும் சில கீழ் நாட்டு வித்வான்களும் புனர் ஜன்மகதியைப்பற்றிப் பேசமாட்டார்கள். நமது புத்தியை மயக்கும் பலவிதமான வாழ்க்கை வித்தியாசங்களுக்கோ காரணஞ் சொல்லவும் துணிவார்கள். சகலவிதமான வாழ்க்கை நிலைகளுக்கும் காரணம் பிதிருபைதாமக மொன்றே போதுமென்கிறார்கள். தாய் தந்தையரிடத்திலிருந்து நாம் பெற்றுக்கொண்ட ஸ்தூல சரீர

210795

மொன்றே ஞானவித்யாசங்கள் குணவித்தியாசங்கள் உணர்ச்சி வித்தியாசங்கள், மனோபாவ வித்தியாசங்கள், எல்லாவற்றிற்கும் காரணமாகுமென்கிறார்கள். மடமை மிகுந்த தாய் தந்தையருக்குஞ் ஞானவான் பிறத்தலும், தாழ்மையான மனோபாவமுள்ள பெற்றோரிடத்து குணபூஷணன் ஒருவன் பிறத்தலும், ஞானிகளான பெற்றோரிடத்துக் குணரகிதனான மடையன் பிறத்தலும், சங்கீதம் சித்திரம் சில்பம் கவித்வம் முதலான கலைஞ்ஞானங்கள் பயின்றறியாத குடும்பங்களில் சங்கீத வித்வான்களும் சித்திரகாரிகளும் சில்பசாஸ்திரிகளும் மகாகவிகளும் பிறத்தலும், கலைஞானங்கள் பயின்ற குடும்பங்களில் கலைஞான சூன்யர்கள் பிறத்தலும், இத்தன்மையான விசித்திரங்கள் யாவையும் வம்சக்கிரமாகதக் கோணமென்பார்கள். நேர் நேராகப் பலிக்காமல் மூதாதைகளில் யாருக்கோ முன்னொரு காலத்தில் அந்த சக்தியோ குணமோ இருந்திருக்கவேண்டும், அது இப்போது தோற்றியிருக்கிறது என்கிறார்கள் இதெல்லாம் கவனித்துப் பார்த்தால் வீண்வாதமாகவே முடியும்.

புனர் ஜன்ம மீமாம்ஸை

ஜன்மம்.

ஜன்மமென்றால், ஈசுவராம்சனான ஜீவன் ஸ்தூலமாயுள்ள பூலோக சரீரத்தைத்தரித்தல். ஜீவன் ஈசுவரனுடைய அம்சம். ஆகையினால் ஈசுவரனைப் போல், நித்யன், அக்ஷரன், என்றால் நாசமில்லாதவன். பிறப்பு, இறப்பு என்றவை ஈசுவரனுக்கு அன்வயிக்கமாட்டா.

கீதையின் 2-வது அத்தியாயத்தில் சொன்னபடி ஜீவன் பிறப்பு இல்லாதவன், நித்யன் சாசுவதன் புராணன். சரீரம் நாசமடையுமே தவிர ஜீவனுக்கு நாசமில்லை. ஆகையால், பிறப்பது வளருவது க்ஷீணிப்பது, இறப்பது இவை ஜீவனை தரித்துக் கொண்டிருக்கும் சரீரத்துக்கே ஒழிய ஜீவனுக்கல்ல.

ஈசுவராம்சமென்றால் என்ன ?

அம்சம் என்றால் பாகம். ஆனால் பாகம் என்றால் அர்த்தம் ஸ்பஷ்டமாகாது. ஈசுவரனில் ஒரு துண்டு என்று சொல்லக்கூடாது. ஈசுவரசக்தி முழுமையும் பீஜரூபமாக (வித்தைப்போல) தனக்குள் இருக்கும் என்று அறியவேணும். ஒன்றிரண்டு உதாரணங்களால் ஸ்பஷ்டமாகும். விருக்ஷத்திலிருந்து ஒரு துண்டை வெட்டி வேறு செய்யப்பட்டதல்ல. விருக்ஷத்திலிருக்கும் சக்தி (உயிர்) எல்லாம் வித்தில் அடங்கி மறைந்திருக்கிறது. பீஜத்தைப் பூமியில் நட்டால்' காலக்கிரமத்தில் முளையாகி, சிறிய செடியாகிப், பெரியவிருக்ஷமாகி, முன்னிருந்த விருக்ஷம் போல் பூர்ணமாக இலை, கிளைகள் புஷ்பங்கள், பழங்களுடன் பிரகாசிக்குமல்லவா? இதெல்லாம் வித்தில் மறைந்திருந்து, காலக்கிரமத்தில் வெளியாவது போல ஈசுவர சக்தி முழுவதும் ஜீவனிடத்தில் பீஜரூபமாக மறைந்திருந்து' பிரபஞ்சத்தில் சரீரத்தைத் தரிப்பதின் மூலமாக, பிரபஞ்சானுபவங்களை அடைந்து, கிரமக்கிரமமாக, ஜீவனிடத்தில் இச்சா ஞானக்கிரியா சக்திகள் விகாஸத்தையடைந்து ஜீவன் பரிபூர்ணத்தையடைவான் அந்த நிலைமையில் ஜீவன் ஈசுவரஸாரூப்யத்தை, அல்லது, ஈசுவ ஸாதர்மியத்தை அடைந்தவனாவான். அப்படி என்றால் ஈசுவரனைப் போல் ஸர்வக்ஞத்வம் ஸர்வசக்தித்வம் முதலான லக்ஷணங்களோடு கூடினவனாவான். இன்னொரு திருஷ்டாந்தம். பெரிய ஜ்யோதியிலிருந்து வெளியாகும் நெருப்புப்பொறியில், மஹாஜ்யோதியிலிருக்கும் சக்தி முழுவதும், அணுமாத்ரமாக இருக்கிறது. தகுந்த அவகாசம் உண்டானால் இந்தப்பொறி கூடப் பெரியஜ்யோதிக்கு காரணமாகுவதைப் பார்க்கலாமல்லவா? அப்படிப்பட்ட மஹாஜ்யோதியானது ஈசுவரன். அந்த ஜ்யோதியிலிருந்து வெளிப்படும் விஸ்புலிங்கம் (பொறி) தான் ஜீவன். இந்த விஸ்புலிங்கம், மஹாஜ் போலாகுவதுதான் பரிபூர்ணத்தை அடைதல். அப்படிப்பரிபூர்ண யோதியாவது தான் பரம புருஷார்த்தம். அது தான்யதார்த்தமான மோக்ஷம். அப்பேர்க்கொத்த பதவியை அடைவதற்கேதான் ஜீவன் சரீரத்தைத் தரிப்பது.

ஆதியில் ஈசுவராம்சம் (ஜீவன்) பிரக்ருதியில் பிரவேசித்து ஈசுவராக்ஞையை அனுசரித்து பிரவர்த்திக்கும் தேவர்களுடைய ஸஹாயத்தால் வரிசையாக ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, பிருத்வி தத்வங்களின் ஸம்பந்தமான ஒவ்வொரு அணுவை மாத்திரம், அந்த லோகங்களில் உபாதியாகக்கைக் கொண்டு, ஸ்தூலப் பிரபஞ்சத்தில், அதாவது பூலோகத்தில் கொஞ்சகாலம் மிருத் (மண்) பாஷாணங்களி (கற்கள்) லிருந்து, அதன்பிறகு ஓஷதிவனஸ்பதிகள் (செடி செட்டுகள், மரங்கள், கொடிகள் முதலானவைகளிலும், அதன் பிறகு, கிருமி) (பூச்சி) கீடக (புழு) பசு, பக்ஷி, மிருகாதிகளிலும் வெகு விதமான அனுபவங்களை அடைந்து அந்த வழியாகசைதன்யம் எல்லாவற்றிலும் சிரேஷ்டமானதும், ஞானத்திற்கு ஸாதனமாயுமுள்ள மனுஷ்ய சரீரத்தில் பிரவேசிக்கக்கூடிய ஸ்திதிக்கு வரும். ஆகையால் தான் வெளிப்பிரபஞ்சத்தில் "உத்தமம் மானுஷ ஜன்ம" அதாவது எல்லா ஜன்மத்திலும் மனுஷ்ய ஜன்மம் உத்தமமானது என்று சொல்வது தகுந்ததாக இருக்கிறது. மிருத்பாஷாணங்களில் ஆத்மசக்தி இருக்கிறதென்று மாத்திரம் சொல்லக்கூடுமே தவிர ஸாமான்யமாகக் காணப்படுகிறதில்லை. செடி செட்டுகளில் பிராணசக்தியானது ரஸரூபமாக காணப்படுவதும் தவிர முளைப்பதும் வளருவதும் செத்துப் போவதும் என்கிற தர்மங்கள் காணப்படுகின்றன. பசு முதலானவைகளில் பிராணசக்தியானது விசேஷமாக உச்சுவாஸ நிசுவாஸ (மூச்சுவிடுதல், வாங்குதல்) ரூபமாகக்கூடத் தெரிவதுமல்லாமல் இந்திரிய வியாபாரங்களாலும் தெரியவருகிறது. அந்தர்யாமியான ஆத்மா, வெளிப்பிரபஞ்ச ஞானத்திற்குசாதனமாயுள்ள இந்திரியங்களை ஏற்படுத்திக்கொண்டு, அவைகள் மூலமாகப் பிரபஞ்சானுபவங்களை ஸம்பாதிக்கக்கூடியதாக இருக்கும் அப்போதைய அனுபவங்களைக் கொண்டு ராகத்வேஷங்கள் விருத்தியாகிக் கடைசியில் அற்புதமாக மனச்சக்தி முளைக்கும். பிறகு சரியான காலத்தில் அந்த மனச்சக்தி ஸ்பஷ்டமாகவும் பசு சரீரத்தைவிட, உத்தமமான மனுஷ்ய தேஹத்தை பெறும்படியான நிலைமை வந்தவுடன், ஜீவனுக்கு சாசுவதமான விக்ஞான மயகோசம் ஏற்படும். இந்த கோச

மும் மஹர் லோக சம்பந்தமான பிரகிருதியால் அமைக்கப்பட்டது. இந்தக் கோசமும் ஆனந்த கோசமும் ஜீவனுக்கு முக்தி கிடைக்கும் பரியந்தம் சாசுவதமாக இருக்கும்படியான உபாதிகள். பூலோக, புவர்லோக ஸுவர்லோக ஸம்பந்தமாயுள்ள ஸ்தூல ஸூக்ஷ்ம சரீரங்கள். அதாவது அன்னமய, பிராணமய மனோமய, கோசங்கள், ஜன்ம ஜன்மத்திலும் மாறக்கூடியவை.

மரணமென்றால் என்ன?

மரணமென்றால் பூலோக ஸம்பந்தமான ஸ்தூல சரீரத்திற்கும், ஜீவனுக்கும் ஸம்பந்தம் விட்டுப்போவதுதான். அந்த ஸம்பந்தம் விடவும், ஸ்தூல சரீரம் நசித்துப்போகும். ஸ்தூல சரீரம் எவ்வளவு சீக்கிரம், ஜீர்ணமாகிவிடுமோ, அவ்வளவு சீக்கிரமாகப் பிராணமய, கோசமும்கூட ஜீர்ணமாகும். ஆகையினால்தான், ஸ்தூல தேஹத்தை புதைப்பதைவிட தஹனம் செய்வது சிரேஷ்டம். ஸ்தூலதேஹம் சீக்கிரம் சாம்பலாகி நசிப்பதற்குள் பிராணமய கோசம்கூட அதனுடன் ஜீர்ணமாகிவிடும். அப்போது ஜீவன் புவர்லோக, ஸுவர்லோக, சரீரங்களுடன் பிரேதலோகத்தில் கொஞ்சக் காலமும், பிதிருலோகத்தில் கொஞ்சகாலமும் வசிப்பான். இந்தப் பிரேதலோக, பிதிருலோகங்கள் ஜீவன் மரணத்திற்குப் பிறகு அடையும் புவர்லோகானுபவங்கள். அந்தக்காலத்தில் ஜீவன் தன்னுடைய காமக்குரோதம் முதலான செய்கைகளால் ஏற்பட்ட பலன்களான சுகதுக்கங்களை அனுபவித்து அதன் சாரமான ஞானத்தை நித்யமானவிக்ஞான மயகோசத்தில் ஸ்திரப்படுத்திக்கொள்வான். பிறகு புவர்லோக சரீரமும் நசித்து விடும். அதன் மேல் ஸுவர் லோக சரீரத்துடன் அந்தலோகத்திற் குரித்தான மனோமய கோசத்துடன் சிறிது காலமிருந்து, பூலோகத்தில் ஜீவித்திருந்த காலத்தில் கொண்ட ஸங்கல்ப விகல்பங்கள், யோசனைகள், சாஸ்திர ஆராய்ச்சிகள், முதலான மனச்சம்பந்தமான கர்மங்களின் பலனின் ரூபமான சுகத்தை அனுபவித்து அதன் சாரமான ஞானத்தை விக்ஞான மயகோசத்தில் வாஸனைகளாகவும், மனச்சக்தியாகவும் ஸ்திரப்படுத்திக் கொண்ட பிறகு அந்த ஸுவர்லோக

சரீரமாகிய மனோமய கோசம்கூட ஜீர்ணமாய்விடும். அப்போது ஜீவன்விக்ஞான மயகோசத்துடன் மஹர்லோகத்தைத் தொடுவான். அதுயதார்த்தமாக ஜீவனுக்கு ஸ்வஸ்தானம், சொந்தவீடு என்று சொல்லலாம்.

பூலோக, புவர்லோக, ஸுவர்லோகங்கள் ஜீவனுக்கு வந்து கொண்டும் போய்கொண்டும் இருக்கும் லோகங்கள். இந்த லோகங்களைச் சேர்ந்த சரீரங்கள் ஜன்ம ஜன்மத்திற்கும் மாறுகிறவை ஜீவனுக்கு முக்தி கிடைக்கும் வரை நித்யமாக நிற்கும் உபாதியானது விக்ஞானமய கோசம் அதாவது மஹர்லோக, சரீரம். இந்த விக்ஞானமய கோசம் திர்யக் ஜந்துக்களில் இல்லை. அது ஏற்படுவது தான் மனுஷ்யத்வம்.

மனுஷ்ய ஜன்மம் வந்த பிறகுதான் ஜீவனுக்கு கொஞ்சம் ஸ்வதந்தரம் உண்டாகித்தான் செய்யக்கூடிய கார்யங்களுக்கும் செய்யக்கூடாத கார்யங்களுக்கும் தானே உத்தரவாதியாகிறான். முன்பின், நேற்று, இன்று, நாளை, என்ற ஞானமும், தான் இதரர்கள், என்ற ஞானமும் உள்ளவனாய் செய்யும் வேலைகளுக்கும் அவைகளின் பலனாகிய அனுபவங்களுக்கும் உள்ள காரிய காரண சம்பந்தத்தை தெரிந்து கொள்ள சக்தியுள்ளவனாகிறான். ஆனாலும் ஞானம் அதி அல்பம். தன் பிரயத்னத்தாலேயே காலக்கிரமேண பரிபூர்ண ஞானத்தை சாதிக்க வேண்டும். அப்படி சாதிப்பதுதான் மேல் சொன்ன பரமபுருஷார்த்தம்.

மார்க்கம்

அப்படிப்பட்ட மஹோன்னத பதவியை அடைய பிரஹ்மாண்டத்தில் அடையக்கூடிய ஞானமெல்லாம் ஜீவனுக்கு உண்டாக வேண்டுமல்லவா? அந்த ஞானம் அடைவதற்கு வேண்டிய சாதனங்கள், ஜீவன் தரிக்கும் சரீரங்கள் தான். பிரஹ்மாண்டத்தில் பூ புவ ஸுவ மஹ ஜன தப ஸத்ய எனும் லோகங்களிருக்கின்றன. இந்த எல்லா லோகங்களினது ஞானம் ஜீவனுக்கு உண்டாகவேண்டுமென்றாலிந்த எல்லா லோகங்கள் சம்பந்தமான சரீரங்கள் ஜீவ

னுக்கு இருக்கவேண்டும். ஒவ்வொரு லோகத்தின் அனுபவத்திற்கு அந்தந்த லோகத்தின் சரீரம் ஜீவனுக்கவசியம். இல்லாவிடில் அந்த லோகம் ஜீவனுக்கு இல்லாதது போல் தான் பூலோகத்தில் கூட சரீரமிருந்தும், கண்களில்லாமற் போனால், சிவப்பு, வெளுப்பு, மஞ்சள், முதலானவர்ணங்களின் ஞானம் அந்த மனுஷ்யனுக்குண்டாக மாட்டா. அவனுக்கு வர்ணவிசேஷங்கள் இல்லாமையைப் போலவேயாம் அப்படியே ஒவ்வொரு இந்திரியம் இல்லாவிட்டால் ஒவ்வொருவிதமான ஞானம் இல்லாமல் போவது போலவே சரீரமே இல்லாமல் போனால் அந்த லோகம் அந்த ஜீவனுக்கு இல்லாமல் போனது தான். பிரயாணம் செய்கிறவனுக்குப் பூமியின் பேரில் வண்டி குதிரை முதலான சாதனங்களும் ஜலத்தின் பேரில் கப்பலும், ஆகாயத்தில் விமானமும், எப்படி ஆவசியகமோ, அம்மாதிரியாகவே, ஒவ்வொரு லோகத்தில் அந்தந்த லோக சம்பந்தமான சரீரம் ஜீவனுக்கு அவசியம். அதில் பூலோகானுபவத்திற்கு சாதனமான சரீரம் சாமான்யமாக ஸ்தூல சரீரமெனப்படும். இது மாதாபிதாக்களால் கிடைக்கும் சரீரம். மீதிலோகங்களில், சாதனங்களான உபாதிகள் தேவர்கள் ஸகாயத்தால் ஜீவனுடைய கர்மானுஸாரமாக உண்டாகும் சரீரங்கள். இவை எல்லாம்சேர்ந்து ஸாமான்யமாக ஸூக்ஷ்ம சரீரமெனப்படும். ஜீவன் பூலோகத்தில் தாயின் கர்ப்பத்தில் உண்டாகும் ஸ்தூல சரீரத்தை தரிப்பது தான் ஜன்மம் என்று சொல்லப்படும். அந்தசரீரம் நிற்கும் காலம் ஒருஜீவகாலம்

ஸ்ரீமத் பாகவதமும் தீக்ஷமார்க்கமும்

சைவம் வைஷ்ணவம் முதலிய மதங்களில் தற்காலம் இவ்வுலகின் கண் போலிக் குருக்களாய்த் தோன்றியுள்ளபர், அம்மதங்களில் பற்றுள்ளவர்களாயும், அவற்றில் கூறியுள்ளபடி கடவுளிடம் பக்தி பாராட்டி நற்கதியடைய ஆவலுற்றவர்களாயுமுள்ளவர்களுக்கு உபதேசம் செய்து அவர்களை நற்கதி கட்குப் பாத்திரர்களாகச்

செய்யும் வண்ணம் தாங்கள் தீக்ஷைகள் கொடுப்பதாக வீண் நம்பிக்கை உண்டாக்கி ஏமாற்றிவருகிறார்கள். தீக்ஷமார்க்க மின்னதென அறிந்திராத இவர்கள் தங்கள் சிஷ்யர்களுக்குச் செய்யும் உபதேசமானது யானையின் உருவத்தைப் பார்த்திராத பிறவிக் குருடனொருவன் பிறவிக்குருடனாகியமற்றோர் ஊமையனுக்குயானையைப்பற்றி உபதேசித்தவாறாகும். மதப்பற்றுள்ள புண்ணியவான்கள் நான் இவ்விதம் அவர்களைப் போலிக்குருக்களென்றும் ஏமாற்றுகிறார்களென்றும் கூறியதற்காக வருத்தப்படாமலிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ஏனெனில், திவ்யஞான திருஷ்டியுள்ளவர்களால் கூறப்பட்டிருக்கிறபடி தீக்ஷமார்க்கமென்பது பலபடிகள் உள்ளதாயும் அதன் முதற்படியிலிருந்து கடைசி அதாவது உன்னதமான படிவரையுள்ள ஒவ்வொரு பதவிகளையும் அடைவது ஒருவன் பலஜன்மங்களில் விசாரமுறையிற் தேர்ச்சியையும் அதில் தன்னிடம் ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சாதன சதுஷ்டய முதலிய நற்குணங்களையும் பொருத்ததாயிருப்பதோடு, அவன் ஒவ்வொரு படிகளுக்கும் ஏகுங்கால் அவ்வக்காலங்களில் அவனுக் கேற்படும் உபதேசங்கள், ஜீவாத்ம பரமாத்ம அபேதத்தன்மையையும், எவ்விடத்தும்தானுமாய் தன்னுள் யாவையுமாயிருக்கும் உண்மையான ஆத்மஞான நிலையையும், பரம காருண்ய நித்ய பரிபூரண சின்மய சச்சிதானந்த ஸ்வரூபியாகிய பரமாத்மாவின் சர்வவியாபகத்தையும், ஊமையன் கண்ட கனவு போல் வாயாற் சொல்ல முடியாதபடி பிரத்தியக்ஷக் காட்சிக்கும் அனுபவத்திற்கும் உள்ளாக்குவதும், ஜீவனுக்கு ஆத்ம சக்திகளை மென்மேலும் விருத்தியாக்குவது மாயிருக்கிறது.

இவ்வுபதேசத்தைக் கொடுக்க பகவத்ஸ்வரூபியாகிய ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா முதலிய அவதார புருஷர்களும் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாய் விளங்கு ஸ்ரீ ஸனத்குமாரர் அல்லது சுப்பிரமண்யக் கடவுளுமே உரியவர்கள். இவர்கள்பிரமாதியோர்களுக்கும் உபதேசித்திருப்பதாய் சாஸ்திரங்கள் கூறுகின்றன.

சித்ரம் வடதரோர் மூலே விருத்தா சிஷ்யா குருர் யுவா குரோஸ்து மௌனம் வியாக்யானம் சிஷ்யாஸ்து சின்னசம்சயாஹ

இந்த சுலோகம் உத்திரப் பிரதியுத்ரமாகி விளக்கப்பட்டிருக்கிறது. சித்ரம் (ஆச்சர்யம்!) எங்கே? வடவாலவிருக்ஷத்தின் கீழ்! என்ன ஆச்சர்யம்? வயது சென்ற கிழவர்கள் சிஷ்யர்களாகக் கூடிக்கொண்டிருக்கிறார்கள். அதனாலென்ன? அவர்களுக்கு குருவாயமைந்திருப்பவர் ஒரு சிறு குழந்தைப்பருவ முள்ளவர்! இதிலென்ன ஆச்சர்யம்? குருவானவர் மௌனமாக விஸ்தரித்துக் கூறி சிஷ்யர்களுக் கேற்பட்டிருந்த சந்தேகங்களை யெல்லாம் நிவர்த்தித்து விட்டார்! ஆச்சர்யம்! ஆச்சர்யம்!!

இந்த சுலோகத்தின் தாத்பர்யத்தையே:—

கல்லாலின் புடையமர்ந்து நான் மறையா
றங்க முதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால் வருக்கும் வாக்கிறந்த பூரணமாய்
மறைக்கப்பாலாய்
எல்லாமா யல்லவுமா யிருந்ததனை யிருந்தபடி
யிருந்து காட்டிச்

சொல்லாமற் சொன்னார். அதாவது நான்கு வேதங்கள் ஆறு சாஸ்திரங்கள் முதலிய வற்றில் செவ்வனே பயின்று அவைகளின் அர்த்ததாத்பர்யத்தை ஆராய்ந்தறிந்த சனக சனந்தனாதியர்கள் நால்வருக்கும் வாயால் அளவிட்டுச் சொல்ல முடியாததாகியும் வேதங்களாலும் தேடியறியாததாகியும் எங்கும் நிறைந்திருக்கும் பரிபூரண வஸ்து எதுவோ அதைப்பற்றிய ஞானோபதேசத்தைக் கல்லால விருக்ஷத்தின் கீழ் தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபமாய் எழுந்தருளி தானமர்ந்திருந்த நிலையிலேயே அந்த ஸ்வரூபமாக ஆகி மோன முத்திரையினால் உபதேசித்தருளினார் என்பதாம்.

ஆகையால் இவ்வுபதேசம் ஒருவர் வாயால் சொல்லி, காதாற் கேட்டு, கண்ணாற் பார்த்து, அடையத்தக்க தன்று என விளங்குகிறது.

இவ்வித ஞானக் காட்சிகளும் உபதேசங்களும் ஊனக்கண்களுக்கு மறிவுக்கும் அடங்காதவைகளாதலால் ஜீவன்ஸ்தூலப் பிரக்

னுயை விட்டு விசேஷ சக்தியுள்ள சூட்சும சரீரங்களிற் பிரக்ஞையுடையவனாகச் செய்து பரமகுருநாதனுடைய சந்நிதானத்திற் சேர்ப்பித்து அம்மகானிடம் பெறச் செய்யும் உபதேசம் எதுவோ அது தான் தீக்ஷை. அந்த பரமகுருநாதனைத் தவிர தேவர்களாவது சித்தர்களாவது முனிவர்களாவது இவ்வுபதேசத்தைக் கொடுக்க அதிகாரமுடையவர்களல்லர்.

ஒருவன் தீக்ஷா மார்க்கத்தை அடைய வேண்டுமானால், அதற்கு அவனைப் பழக்கத்தக்க குரு ஒருவர் வேண்டும். அத்தகைய குருக்கள் மேற்கூறிய போலிக் குருக்களன்று பரமகுருநாதன் திருவடிகளில் நம்மைச் சேர்ப்பிக்கும் பொருட்டு மேற்சொன்ன தீக்ஷா மார்க்கங்களின் உபதேசங்களிற் சிலவற்றையோ பலவற்றையோ பெற்றவர்களாகிய மகரிஷிக் கூட்டத்தார் இருந்து வருகிறார்கள். அவர்களுக்கு வெள்ளியம்பலத்தாரெனப் பெயர் வழங்கி வருகிறது. அம்மகான்கள் உலகத்தில் பக்குவமடைந்தவர்களாயும் நிவர்த்தி மார்க்க வழியிற் சென்று தீக்ஷைகளைப் பெற உண்மையில் விருப்பமுள்ளவர்களாயும் உள்ளவர்களைத் தங்களுக்கு சிஷ்யர்களாக அங்கீகரித்துக் கொண்டு அவர்கள் அத்தீக்ஷைகளை அடையச் செய்வதற்காகப் பழக்குகிறார்கள். உண்மையான பக்தியும் வைராக்கியமும் ஆதுரமும் ஒருவனுக்கிருக்கும் பக்ஷத்தில் அவர்கள் அவனை எவ்விதமும் கண்டு பிடித்து தடுத்தாட் கொள்வார்கள். சர்வஜீவராசிகளிடமும் அன்பு பாராட்டி அவைகட்கு நன்மை புரிதலே அக்கூட்டத்தார் வேலையாதலால் அவ்வழியிலேயே நடக்கும் ஒருவனை அவர்கள் சீக்கிரம் கண்டு கொள்வார்கள். அது விஷயத்தில் சந்தேகமே வேண்டாம்.

மேற் கூறிய தீக்ஷைக் குரிய உபதேசங்கள் பக்குவமடைந்த ஜீவர் கட்கு கொடுக்கப்படும் காலத்தையும் அவஸ்தை நிலைகளையும் ஸ்ரீமத்பாகவதம் பத்தாவது ஸ்கந்தத்தில் காணலாம். பகவானுடைய ஸ்ரீராமாவதார காலத்தில் சாதனசதுஷ்டயம் முதலிய சம்பத்துக்களிற் தேர்ச்சி பெற்றிருந்த தபோதனர்களை பகவான் கிருஷ்ணாவதாரம் செய்தகாலத்தில் ஒருங்கு கூட்டி கோகுலத்தில் ஜனிக்கச்

செய்து அவர்கட்கு தீக்ஷை கொடுத்தார். இந்த உபதேசத்தை பாகவதத்தில் பகவான் கோபிகைகளுடன் ராஸக்கிரீடை செய்து விளையாடியதாகக் கதை சொல்லப்பட்டிருக்கிறது.

தங்கள் தங்களுக் கேற்பட்டிருந்த சம்சார பந்தங்களை மறந்து ஸ்ரீகிருஷ்ணபகவானுடைய அடிச்சுவடுகளின் சப்தம் எப்போது கேட்குமோ, ஜகன் மோகனராகிய அவர் பசுக்களை (ஜீவர்களை) அழைக்கும் குரலோசை எப்போது தங்கள் செவிக்கு கேட்குமோ, பக்தவத்ஸலராகிய அவருடைய பாதார விந்த தெரிசனம் எப்போது தங்களுக்குக் கிடைக்குமோ, சர்வஜீவராசிகளையும் சம்சார பந்தங்களிலிருந்து ஆகர்ஷித்து தன்னிடம் சேர்த்துக் கொள்ளும் மகிமை வாய்ந்ததான் அவருடைய புல்லாங்குழலோசை எப்போது தங்கள் செவிகளிற் படுமோவென்று சதா காலமும் பகவானுடைய குணாதிசயங்களையே நினைத்து நினைத்து அவரிடம் பக்தி செலுத்திக் கொண்டிருந்த கோபிகைகளாகிய ஜீவர்கள் இராக்காலத்தில் பகவானுடைய வேணுகான நாதத்தைக் கேட்ட மாத்திரத்தில் பரவசர்களாகி பிருந்தாவனத்தில் பகவானிருக்குமிடம் தேடிச் சென்றார்களென்றும், பகவான் அவர்களுடன் தான் தனியாகவும் சில சமயங்களில் பலராமருடன் சேர்ந்தும் ராஸக்கிரீடைகளை நடத்தி பலவிதமான லீலைகளைச் செய்தாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இதில் முக்கியமான விஷயங்கள் இரண்டு. கோபிகைகள் தங்கள் ஸ்தூல சரீரங்களுடன் பகவானிடம் சென்றார்களா? என்பது ஒன்று. பகவான் அவர்களுடன் சேர்ந்து நடத்திக் காட்டிய விளையாட்டென்ன? என்பது இரண்டு

எந்த சரீரங்களிற் கோபிகைகளைப் பகவானைத் தேடிச்சென்றார்களென்பதைக் கவனிப்போம் கோபிகைகள் பகவானிடமிருந்த காலங்களிலெல்லாம் அவரவர்கள் வீட்டிலுள்ளவர்கட்கும் குழந்தைகட்கும் பந்துமித்திரர் கட்கும் அக்கோபிகா ஸ்திரீகள் அவரவர் வீட்டிலேயே இருந்ததாகக்காணப்பட்டார்களென்றும் பகவான் தன்னுடைய யோகமாயையால் அக்கோபஸ்திரீகளிடம் பிருந்தாவனத

தின் மிகப்புனிதமான இடத்திற்கு அழைத்துச் சென்றாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகையால் அவர்கள் பகவானிடம் சென்றது அவர்களுடைய சூட்சும சரீரத்தில் என்று நிச்சயமாக எற்படுகிறது.

இரண்டாவது அவர்களுடன் பகவான் என்ன லீலைகளை நடத்தினார் என்பதைக் கவனிப்போம். பகவானிடம் முதலிற் போய்ச்சேர்ந்த காலத்தில், அவர்கள் பக்தர்களாயிருந்தும் சொல்பபாக்கியிருந்த சரீராபி மானங்களினால், தற்காலத்தில் பகவானைத் தாங்கள் அடைந்து விட்டதாகக் கர்வங் கொண்ட கோபஸ்திரீகளுக்கு மத்தியிலிருந்த பகவான் திடீரென மறைந்தும், அவர்கள் தங்கள் சரீராபிமான முதலியவற்றில் பற்றற்று தங்கள் உடல் பொருளாவி மூன்றையும் அவருக்கு அற்பணம் செய்து அவரே தங்களுயிராகக் கருதி மற்றொன்றையும் நினையாது ஸ்ரீகிருஷ்ணா கிருஷ்ணாவென்று அவரிடஞ் அசஞ்சல திடபக்தியுடன் ஏகாக்ரத் தியானமயாயிருந்ததால் ஹிருதய கமலவாசியாகிய அந்த கிருஷ்ண பகவானுமே தாங்களாய் விட்டதாய் பிரமரகீடநியாயம் போல் பாவித்து அவரைப் போலவே லீலைகளை நடித்துக்கொண்டிருக்கும் போது பகவான் அவர்கள் மனது பக்குவத்துக்கு வந்து விட்டதை யுணர்ந்து அவர்கட்குப் பிரசன்னராகி ஞானோபதேசம் செய்தாரெனக் கூறப்பட்டிருக்கிறது. இதுதான் அவர் செய்த விளையாட்டு.

பாகவத புராணம் அக்ஞர் விசேஷக்ஞர் முதலிய யாவரும் படித்து அவரவர்கள் புத்தியின் பரிபாகத்துக்குத் தக்கபடி சாராம்சங்களை உணர்ந்துய்யுமாறு ஏற்பட்டதாதலாலும், உபதேசத்தைப் பற்றிய விஷயங்கள் மேலே கூறியுள்ளபடி வாயால் வெளியிட்டுச் சொல்ல முடியாதவைகளாதலாலும், இவ்வுபதேசத்தை மறைபொருளாக விளையாடினார் எனச்சொல்லப்பட்டது பக்குவமடைந்த ஜீவர்கள் ஸ்ரீகிருஷ்ணபகவானைத் தரிசித்த மாத்திரத்தில் அவர்கள் மனது அற்ப விளையாட்டிலா நாடும்? அல்லது சர்வ பந்தங்களையும் அடியோடுக் களைந்து முக்திக்கு உரியதாகச் செய்யும் பரமபாவனராகிய அவருடைய சந்நிதமான விசேஷம் பக்குவமாயுள்ள ஜீவர்களைக்காம விகார விளையாட்டிலா செலுத்தும்.

ஸ்ரீகிருஷ்ண பகவானுடைய லீலாவிநோதங்களைப் படித்த அல்லது கேட்டவர்கள் சற்று கவனிப்பார்களாயின் அவர் பிரம்மாதி தேவர்களையும் மோகித்துப் போகும்படி செய்த பரம குருவென்பதையும், தன்னிடம் பக்தி செலுத்திப் பரவசமடைந்த லட்சக்கணக்கான ஜீவர்களை ஒன்று கூட்டி அவர்களுக்கு ஏககாலத்தில் ஞானதீக்ஷைகளைக் கொடுத்தாரென்றும் உணர்வார்கள்.

இப்போது ஸ்ரீகிருஷ்ணஜயந்தி ஸ்ரீராமநவமி முதலிய உத்சவங்களில் பாகவதர்கள் ஜெகநாதப் பிரத்திக்ஷனம் என்பதாக நடத்தும் பாகத்தில் அவர்கள் ஸ்ரீகிருஷ்ணபகவான் செய்த லீலைகளென நடிப்பவைகளைக் கவனிப்போமாயின் அவர்கள் சொல்லும் சுலோகங்களும், பாடும் கீர்த்தனங்களும் நடித்துக் காட்டும் செய்கைகளும் இவவுண்மைகளை விளக்கும்.

ஓம் தத்ஸத்

சுசீலை அல்லது உண்மையின் வெற்றி.

10-வது காட்சி.

(பங்கஜத்தின் வீடு)

பிரவேசம்—பங்கஜம்

பங்:—ஒரு நாளாவது இங்கே வரத்தவறாதவர் இப்பொழுது இவ்விரண்டு மூன்று நாட்களாக இவ்விடம் வாராதிருப்பது எக்காரணம் பற்றியோ தெரியவில்லையே என்ன ஆச்சரியம்? இதென்ன விபரீதம்? இவ்வூரைவிட்டுவேறெவ்வூருக்காவது சென்றிருக்கின்றாரோ? அப்படி யிருக்கமுடியாதே. அவ்விதம் செல்ல யாதொரு காரணமும் கிடையாதே. ஒரு பொழுது மென்னிடந் தெரியப்படுத்தாமலப்படிச் செல்வது வழக்கமில்லையே. ஒரு வேளை தேகத்திற்

தேனாவது அசௌக்ய மேற்பட்டிருக்கிறதோ? பிறந்தது முதல் ஒரு தலைவலிகூட அணுகாத அவர் தேகத்திற்கு இப்பொழுதெப்பிணி வந்திருக்கக்கூடும்? அவரது கிருஹத்துக்குப் போய் ஸுசீலையம்மாளிடம் இதைப்பற்றி விசாரிக்கலாமென்றாலோ அவரிருக்கும் சமயத்தில் அவரகத்துக்குநான் போகக்கூடாதென்று அவர தாக்கினை. இப்பொழுதோ அவர் அகத்திலிருக்கிறாரா இல்லையாவென்பது நிச்சயமாகத்தெரியவில்லை, எல்லாவற்றிற்கும் மரகதம் போயென்ன சமாசாரம் கொண்டு வருகிறாளென்பதைப் பார்ப்போம். ஒருவேளை வேறெந்த ஸ்திரீயினுடைய வலையிலாவது அகப்பட்டுக்கொண்டாரோ. ஐயோ, இப்படி நினைக்கும் பொழுதே என் மனம் பதறுகிறதே. இப்படியேதாவது நேர்திருக்குமாயின் பிறகிப் புவியின்கண் நான் ஜீவித்திருப்பதெங்ஙனம்? அவரைத் தவிற எனக்கு வேறுகதியில்லையென்றெண்ணி, என் மனது முழுவதையுமவர் வசமொப்புவித்து, எனது தாய்க்கிழவியின் வார்த்தைகளையும் நிர்ப்பந்தங்களையும் நிராகரித்து அவரிவ்வீட்டிலில்லாத வேளையிலித்தாய்க் கிழவியாலுண்டாகும் ஹிம்சைகளனைத்தையும் அவரிப்பொழுது வருவார், பிறகு இத்துக்கங்களெல்லாம் நம்மை விட்டு அகலுமென்ற ஆசை கொண்டு பொறுத்து வருகிற எனக்கு அவரிவ்விதம் [illegible] செய்யத் துணிந்தால், பிறகு [illegible] வேண்டும்? ஐயோ? இப்பாழும் மனமென்ன வெல்லமோ நினைக்கிறதே, நானென்ன செய்வேன். இவ்விரண்டு மூன்று நாட்களாக அன்ன ஆகார நித்திரை யில்லாமல் நான் படுந்துயரத்திற்கு முடிவு எப்பொழுது வரப்போகின்றதோ?

(நீலன் வருகிறான்.)

என்னடா, போய் விசாரித்தாயா!

நீல:—அம்மா, நான் போய் விசாரித்துப் பார்த்தேங்க. ஒத்தராவது நெசஞ்சொல்ல மாட்டேங்கராங்க எவனூட்டலே கொணஞ்சாலும் வெள்ளூன்னு நாய் மாட்டமாவுளார. என்னடா ஒங்க ஐயரைத் தேடிக்கிட்டு வந்தயோ, ஒங்க ஐயரு இங்கே இல்லே போ இன்னு சொல்லுராங்களே ஒளிய சரியா பேசமாட்டேங்கராங்க.

பங்க:—அடே, நீலா, அவர்கள் கோபித்துக்கொண்டால் நீ அதற்கு மேல் கோபித்துக் கொள்ளுகிறாயே, எல்லா வீட்டிலேயும் போய் விசாரித்தாயா?

நீல:—ஒரு வூடு விடாமே நான் போய்ப் பாத்தேங்க அம்மா.

பங்க:—அடே, நீலா, தோடிக்குப் பக்கத்து வீட்டில் சுந்தராங்கி யென்று யாரோ ஒருவளிவ்வூருக்குப் புதிதாக வந்திருக்கிறாளாமே, அங்கே போய்ப் பார்த்தாயா?

நீல:—அங்கிட்டுத்தான் நாமொல்லே போய்ப் பார்த்தேங்க.

(தாய்க்கிழவி வருகிறாள்)

(நீலன் மறைகிறான்)

தாய்:—என்னடி, என்னவோ இந்த லோகத்திலே யில்லாத புருசனை பார்த்துட்டாப் போல அந்த ஐயனை கட்டி கிட்டு அளரே. இவனில்லாத போனா நூறுபயமவன் கொணாந்து தரேண்டி நான். என்ன மோரண்டு மூணு, நாளா அந்தப்பாம் பான் வல்லையாம் அதுக்காக சாப்பாடு கூப்பாடு எல்லாத்தையும் விட்டுட்டு இருக்கயே, ரொம்ப அளவாத்தானிருக்கு.

பங்:—அம்மா, நானெத்தனையோ தடவை யுனக்குச் சொல்லியிருக்கிறேன். அவர் விஷயத்தில்மட்டும் என்மனமொரு நாளுமவரைத்தவிற வேறொரு புருஷனையுங் கண்ணெடுத்துப்பாரேன்.

தாய்:—என்ன சொன்னே? நாஞ்சொல்லரத்தெக்கேளு பங்கசம், நமக்கு முக்கியமா பாக்கவேண்டியது பணந்தான் அதுக்கப்பரந்தான் மத்ததெல்லாம். இந்த பாப்பானுயிருந்தாலும் சரி வேறு யாராயிருந்தாலும் சரி நமய பணத்தெ காக்கனும்.

பங்:—அம்மா, எத்தனை தடவை நானிவ்விதம் பேசவேண்டாமென்று சொல்லியிருக்கிறேன். இதைத்தவிர வேறு எதேனும் விஷயங்களிருந்தாற் சொல்லேன்.

தாய்:—என்னடி பங்கசம், நீ ரொம்ப பேச படிச்சிட்டே. நேக்கு நீ புத்திசொல்லவரயோ என் வாயேமூடபாக்கரயா, ஏன்னா? மோ நான் போறுப்போறதுன்னு இருந்தாக்கே எந்தலமேலெ ஏற ஆரம்பிச்சுட்டாயே. வாயெ மூடிண்டு நாஞ் சொல்ரத்தெ கேட்டியோ பொளச்சே, இல்லாட்டி என்ன பண்ணுவேன் தெரியுமில்லியோ.

தாய்:—அம்மா, ஏனிவ்வளவு கோபம் வருகிறது உங்களுக்கு. அவரைப்பற்றின விஷயத்தைத் தவிற வேறு எல்லாவிஷயங்களிலும் நானுங்கள் வார்த்தைப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேன்.

தாய்:—திருப்பியும் திருப்பியு மந்த சமாசாரத்தைத் தானே கட்டிக்கிட்டு அளரே. இந்தக் கதையெல்லாங் கட்டித்தூரவை. அந்தந்த சாதிக்காரர் அந்தத்தொளிலெ செஞ்சாத்தான் நன்றாயிருக்கும். நமக்கு ஆரு பணந்தாரேளோ அவனெத்தான் பெருமெப் படுத்தணும்.

பங்:—திரும்பவுந் திரும்பவும் ஜாதித்தொழிலைப் பற்றி பேசுகிறாயே. நடத்தையால் ஜாதியை நிர்ணயப்படுத்த வேண்டுமே யொழிய பிறவியினால் மட்டும் ஜாதியை நிர்ணயிக்க முடியாது. தாஸிக் குலத்திற் பிறந்தாலென்ன பதிவிரதையா யிருக்க முடியாதா, இருக்கலாகாதா? கெட்ட தொழிற்றான் செய்யவேண்டு மென்று ஒரு ஜீவனையு மிப்புவியிலீசன் சிருஷ்டிப்பதில்லை. நம்முடைய நடத்தையாற்றான் நாம் உயர்வை யல்லது தாழ்வையடைகிறோம். நாமெந்த ஜாதியிற் பிறந்திருந்த போதிலும் நன்னடத்தையை மட்டும் கைவிடாது மேற்கொள்வோமானால் உயர் குலப்பதவியை நாமடைகிறோம் உயர் குலத்திற் பிறந்து கெட்டுப்போகிறவர்களை நாம் கண்ணுற் கண்டதில்லையா? அவர்களைவிடக் கீழ்க்குலத்திற் பிறந்திருந்த போதிலும் நன்மார்க்க நிரதர்களாயிருப்பவர்கள் வெகு சிறந்தவர்களென்பதற்கையமில்லை.

தாய்:—பங்கசம், போரும் போரும், உன் வேதாந்தங்களெல்லாம் தூரக்கட்டிவை எதோ ரண்டெழுத்து சமிசுகிருதம் படிச்சுட்டா

லக்ஷ்மி. இல்லாத பேச்செல்லாம் பேசரா? நீ ரொம்ப கண்டேட்டேலியா வாயே மூடிண்டு நாஞ்சொல்ரத்தே கேட்டியோ பொளச்சே. அந்தப் பாப்பான் கிட்டேயிருந்து பணம் பிடுங்கப்போரியா இல்லையா ஒரே வார்த்தை பதிற் சொல்லு.

பங்:—(தனக்குள்) இதென்ன சங்கடமாயிருக்கிறதே, நானென்ன செய்வது? இவளையும் ரொம்ப வருந்தச் செய்யலாகாது. குழந்தைப்பருவ முதலென்னைப் பாதுகார்த்து வந்த இவளையெப்படி நான் முழுவதும் நிராகரிப்பேன்?

(வெளிப்படையாக) அம்மா, நானவரிடமிருந்து பொருள் வேண்டுமானால் வாங்கப் பிரயத்தனம் செய்கிறேன், அவரை விட்டு பிரிகிறதென்கிற சமாசாரத்தைப் பற்றி மட்டு மென்னிட மொரு வார்த்தையுங் கூறாதே.

தாய்:—தொலைஞ்சுபோ எப்படியாவது பணம் வந்தா சரி

பங்:—எப்படியவரிடமிருந்து பொருள் வேண்டுவது?

தாய்:—கேக்கிற கேளுவியெப்பாரு. தேவிடியாளாப் பொறந்துட்டு வெக்கமால்லியா ஒனக்கு இப்படிக்கேக்க? எப்படி பணம் கேக்றதா? நான் சொல்ரேன் கேளு. மின்னே ஒரு நா ஒனக்கு ஒட்டியாணம் கொண்டாந்து தரேன்னு அந்தய்யன் சொன்னான்னு சொன்னேல்லியோ? இன்னக்கி அவன் வந்தாக்கே—

பங்:—அவரைத் தானிம் மூன்று நாட்களாகக் காணோமே இன்றைக்கு மிங்கே வாராமலிருந்தாலோ?

தாய்:—என்னடி மாயரே இன்னக்கில்லாட்டி நாளைக்கு, இல்லாட்டி அவன் வரும்பொழுது, மொள்ள நயமா பேசணும். பேசி அந்த வளையப்பத்திக் கேக்கணும். அவன் கெட்டிக்காரப் பாப்பான். சரியா பதில் லேசிலே சொல்லமாட்டான், நீ விடப்படாது. அதெக் கொணுந்தாத்தான் போச்சுன்னு கட்டியாப் பிடிச்சுக்கிணம் தெரியுமா?

பங்:—அவர் கோபித்துக் கொண்டு போய்விட்டால் நானென் செய்வது?

தாய்:—நல்ல பயித்தியம். அவனாபோவன். எத்தயாவது சாக்குப் போக்குச் சொல்லி ஏமாத்தப் பாப்பான். நீ முட்டும் தயங்கப் படாது. பிடிவாதம் பண்ணணம். நகை யெக்கொணாந்தாத்தான் இங்கே வரலாம். இல்லாட்டி வரவண்டாங்கணம்.

பங்:—என்ன அம்மா? அவ்விதம் அவரிடம் நானெப்படி யுரைப்பேன். என் மனந்துணியாதே.

தாய்:—நன்றாத்தானாச்சு. சும்மாச்சொல்லடி ஒன்றும் பயமில்லே. இங்க விட்டுப் போக்கடமெங்கே அந்தப்பாப்பானுக்கு நகயெக்கொண்டு இங்கதான் திரும்பியும் வருவான் நீ ஒன்றுக்கும் பயப்படாதே.

பங்:—அம்மா அவர் ரொம்ப ரோசக்காரரடி. இவ்வித மவரிடம் நான் பகர்ந்தால் என்னை நிராகரித்துச் சென்றாலும் செல்லுவார். அவருக்கென்னடி குறை. நானில்லாமற் போனால் வேறு எத்தனையோ பேர்கள் அவருக்காகக் காத்துக் கொண்டிருப்பார்கள்.

தாய்;—ஒனக்கொன்னும் தெரியாதுடீ நான் சொல்ரேன் கேளு. நீ நான் சொன்னாப்போலே செய்தியோ, பார் கட்டாயம் நம்ம காரியம் பலிச்சிட்டுத்தூன்னு வச்சுக்கோ. போராப் போல போவான். திரும்பியும் வந்துடுவான். நகையும் கொண்டாந்து குடுப்பான். நீ ஒன்னுக்கும் பயப்படாதே.

பங்:—(தனக்குள்) ஐயோ இந்த சங்கடத்திற்கு நானென்ன செய்வேன்? இவள் சொல்லுகிறபடி நான் செய்ய எப்படி யென் மனம் துணியும்? துணிந்து நானவ்விதம் கேட்கலுற்றாலும் அவரென்ன செய்வாரோ நானறிகிலேனே (வெளிப்படையாக) அம்மா ஆகட்டும், நான் அப்படியே கேட்கிறேன்.

தாய்:—இப்படி யெல்லாம் நீ சொன்னாப்போராது அப்படியே செய்தாகணம்.

பங்:—ஆகட்டும்.

தாய்:—எனக்குச் சத்தியம் பண்ணு, அப்படிக்கேக்கறேன்னு

பங்:—(சற்றுத்தயங்கி சத்தியம் செய்கிறாள்)

(நீலன் வருகிறான்)

நீல:—அம்மா, சாமி வாரா்ங்க.

தாய்:—பங்கசம், ஜாக்ரதை பல்லேயிளிச்சுகிட்டு நிக்காதே. நின்னியோபாத்துக்கோ.

(தாய், நீலன், போகிறார்கள்)
(சபாபதி வந்து ஒரூஞ்சலின் மீதுட்காருகிறான்)
(பங்கஜம் தலைகுனிந்து தூரநிற்கிறாள்)

சபா:—என்ன பங்கஜம் கோபமா?

பங்:—எனக்கென்ன கோபம் வந்திருக்கிறது. இந்த ஜன்மமெடுத்த பிறகு கோபம் கூட வேண்டுமா வெனக்கு?

சபா:—என்னடி அவ்வளவு நொந்து சொல்லுகிறாய்?

பங்:—ஆமாம், நீங்கள் பேசமாட்டீர்களா? நான் வருத்தப்படலாமா? சந்தோஷப்படத்தான் வேண்டும்.

சபா:—ஏதாவது முக்கியகாரண மில்லாமல் நானிப்படி யிங்கு வாராதிருப்பேனா? உனக்கது தெரியாதா?

பங்:—புருஷர்களுக்கென்ன? ஒரு நொடிப் பொழுதிலாயிரம் காரணங்கள் வேண்டுமென்றாலு மகப்படும்.

சாக்குச் சொல்வதற்கு அஞ்சவே மாட்டார்கள். எப்படியும் ஸ்திரீ ஸ்திரீதான்.

சபா:—இன்னும்விடமாட்டாயா? நான்தான் சொன்னேனே காரணமில்லாமல் நானொன்றுஞ் செய்யமாட்டேனென்று.

பங்:—அதற்கென்ன, காரணம் சொல்ல முடியாதா? “ஏதோ இவளொருத்தி யிருக்கிறாளே, அவளிடத்தில் சொல்லி விட்டா

வது போவோம் ” என்று இங்கே வந்து ஒரு வார்த்தை சொல்லி விட்டுப் போகலாகாதா? அல்லது யாரிடத்திலாவது ஒரு வார்த்தை சொல்லியனுப்பலாகாதா? அதேது.ஞாபகமிருந்தாலல்லவா அப்படிச் செய்ய வேண்டுமென்று மனதில் தோன்றும். ஐயோ, நானிம் மூன்று நாட்களாகப்படுகிற துன்பமீசனுக்குத் தான் தெரியும். என்னவோ, ஏதோ, உடம்புக்கேதாவது அசௌகரிய மேற்பட்டிருக்கிறதோ வென்று ஒன்றும் தெரியாமல் நான் தவித்துத் தண்ணாயுருகினது எனக்கல்லவோ தெரியும். எங்கெல்லாம் தங்களைத் தேடச் சொல்வது? நீலனையனுப்பாத விடங்கிடையாது. நேற்றைக்குத் தம்பூரானிங்கே வந்திருந்தான். அவனுக்கேதாவது தெரியுமோ வென்று கேட்ட போது அங்கேயும் தாங்களிரண்டு மூன்று நாட்களாக போகிறதில்லை யென்று தெரியவந்தது. எங்களெல்லோரையு மிப்படி ஒரேவாறாய் மறந்து விடும்படி யென்ன காரியம் வந்ததோ தெரியவில்லை.

சபா:—பங்கஜம், நான் தான் சொன்னேனே அப்படிப்பட்ட காரியமொன்று நடக்கலாயிற்று.

பங்:—ஒஹோ, இந்தமையப் பேச்சு எங்கிருந்து படித்தீர்கள்? இப்போது பேசுகிறதைப் பார்த்தால் புது மனிதர் போலல்லவோ தோன்றுகிறது. அதிருக்கட்டும். ஒரு மாதத்திற்கு முந்தி நான் வைரவளை வேணடு மென்று கேட்டதற்கு நாலு நாட்களில் கொண்டு வந்து கொடுப்பதாகச் சொன்னீரல்லவா? ஞாபகமிருக்கிறதோ? கொண்டுவந்து கொடுத்தாயிற்று? எப்போது கொண்டு வந்து கொடுக்கப் போகிறீர்கள்?

சபா:—(முகம் சினந்து) அப்படிச் சொன்னேனே? ஆம் சொன்னேன். பங்கஜம், அப்போது சொன்ன வார்த்தை பொய் வார்த்தையே யொழிய நிஜமல்ல. அது என்னால் முடியாத காரியம். அப்படியிருக்க நானவ்வைரவளை கொண்டு வந்து தருவதாக ஒப்புக்கொண்டது தவறே, பொய்யே.

பங்:—(ஆச்சரியத்தோடு) என்ன, தாங்கள் தானா பேசுகிறது.

ந்து எல்லா விதத்திலும் மாறிவிட்டீர்கள் போலும். போனது போகட்டும். இனிமேலாவதந்த வளையலை யென்றைக்கு கொண்டு வந்து கொடுப்பீர்களென்று தீர்மானமாய்ச் சொல்லும்.

சபா:—நான் சொல்ல முடியாது. வீணாகவார்த்தைகளைக் கொடுக்க மாட்டேன் என்னாலந்தநகையை யெப்போதாவது கொண்டு வந்து கொடுக்க முடியுமோ என்பதே உறுதியாய்க்கூற முடியாதுவென். இது எனக்கு அசாத்திய மென்றே நினை. ஆம், ஒரு பொழுது மவ்விதநகைகளென்கை தனிலகப்படா. இதற்குச் சந்தேகமில்லை.

பங்:—என்ன ஒஹோ நா, அப்படியா? சரி அப்படியானாலதைக் கொண்டு வந்த தினமிங்கே வரலாம், (பயத்தோடு சபாபதி முகத்தைப் பார்க்கிறாள். இவ்வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் சபாபதி யெழுந்து புறப்பட்டு வருகிறான் பங்கஜம் ஓடிவந்து வழியை மறைத்துக் கொள்ளுகிறாள்.)

சபா:—(கோபத்தோடு) பங்கஜம், வழியைவிடு, ஒதுங்கு.

பங்:—என்ன நாதா? இப்படித் தாங்கள் கோபங் கொள்ளலாமா? இதென்ன விபரீதம்?

சபா:—வீண் வார்த்தை யாடாதே. இனி நானிங்கே யிருப்பது சரியல்ல, வருவதும் நியாயமல்ல.

பங்:—(சபாபதியின் முகத்தை யுற்றுப் பார்த்து) (தனக்குள்) ஐயோ இதென்ன ஒரு நாளுமில்லாத புதுமையாயிருக்கிறதே. நானென்னசெய்வேன்? பிடிவாதம்செய்யத் தொடங்கினாலிவரிடமெவர்வார்த்தைதான் பயன் படும்? (வெளிப்படையாக) தாங்களிப்படி யுரைப்பது நியாயமா? என்னிடமிப்படிக் கடிந்து கொள்ளலாமா? இதுவரையிலுமிப்படி யொரு நாளாவதிருந்ததில்லையே. நானுங்களிடம் வைரவளையைப் பற்றி யுரைத்த வார்த்தைகள் நானாகவே சொன்னதல்ல. இந்தத் தாய்க் கிழவியின் நிர்ப்பந்தம் பொறுக்க மாட்டாமல் புகர்ந்தவைகளே.நீங்கள்தான் கொண்டுவந்துகட்டாயம்

தருகிறேனென்று ஒரு யுரைக்கலாகாதா? பிறகு வார்த்தை பார்த்துக் கொள்வோம். இதற்காக இவ்வளவு கோபமா?

சபா:—அப்படியா. (சற்று யோஜித்து தனக்குள்) மனமே, தடுமாறாதே. பொய்க்கிடம் கொடாதே. சீ, இது சரியல்ல இவளுடைய பிரலாபத்துக்கிரங்கி பொய்யுரைப்பதா? ஒரு நாளும் மாட்டேன். இனி நானிங்கு வருவதுதவறுதான். வருவேனானால்இவ்வித மடிக்கடி பொய் சொல்லத் தூண்டுதல்களேற்பட்டாலுமேற்படும். அசத்தியமில்லாமலிங்கே சந்தோஷமாயிருப்பதசாத்தியமான காரியம் தான். குருஜி என் வலது கையை முறித்துக் கொண்டு போய் விட்டார்.

(வெளிப்படையாக) பங்கஜம், எனக்குன் மீது கோபமில்லை. இனியென்னாலிங்குவர முடியாது. மறுபடியும் மறுத்துப் பேசாதே என் சுவபாவமுனக்கு நன்றாய்த் தெரியும். நான் தீர்மானித்து விட்டேனினியிங்கே வரக்கூடாதென்று.

பங்:—(கண்களில் நீர்ததும்ப தனக்குள்) சரி, என் தலைவிதி விழுந்தாய் விட்டது. மனதைத் திருப்ப இனிதிரிநேத்ரனாலு மாகாதே. ஈசா, நானென் செய்வேன் மனம் பதைக்கிறதே. என் வயிறெரிகிறதே. ஐயோ, (வெளிப்படையாக) எனக்கு வேறு கதியென்ன? நானென்ன செய்வேன்?

சபா:—உனக்கென்ன? என்னசெய்வதாவது? உனக்கா ஜீவனத்துக்கு வழியில்லை.

பங்:—நாதா, தாங்களிவ்வித முரைக்க என் நெஞ்சம் கொதிக்கின்றதே. தங்களிடத்திற் சென்று வென்மனம் வேறொரு புமானிடத்திற் செல்லுமா? தங்களைப்பார்த்தானந்தித்த கண்கள் வேறொருவனைக் கண்டுகளிக்குமா? அது ஒருக்காலுமில்லை. என்பிராணனை விட்டாலும் விடுவேனே யொழிய அவ்விதத் தொழிலை யொரு நாளும் மேற் கொள்ளேன். இது சத்தியம். நீ ரெங்கு சென்றாலும் நான் கூடவே வருவேன். அதற்கா வநுத்திரமளிக்கவேண்டும்.

சபா:—(சற்று யோஜித்து) அது முடியாது. ஆனால் நீ யொன்றிற்கும் விசாரப்படவேண்டாம். இந்த வீட்டை யுன்பெயருக்கே சாஸனம் செய்துவைத்திருக்கிறேன். இந்தமனைக்குப்பின்பாகத்திலுள்ள பெரிய தோட்டத்தையு முன்னுடையதாகவே செய்திருக்கிறேன். அத்தோட்டத்தின் வரும்படியைக் கொண்டு நீ வெகு சௌகரியமாய் ஜீவனம் செய்யலாம். அப்படி யேதாவது செலவுக்குப் போதாமல் பொருள் வேண்டி வருமானால் ஸுசீலையிடம் சென்று வேண்டியதை வாங்கிக்கொள். (போகிறான்) (பங்கஜ முற்றுப் பார்த்துக்கொண்டிருந்தவள் தலைமறைந்த பிறகு அருகிலுள்ள ஒரு கட்டிலின மீது சாய்ந்து விம்மி விம்மியழுகிறாள்.)

(திரை விழுகிறது)

ஆர். ஸ்ரீனிவாஸன், எம். ஏ.

புத்தகவரவு.

கோடுந்தேசயலந்ப சீர்திருத்தம்:— டி. எ. கோபாலஸ்வாமி நாயுடு மொழி பெயர்த்தவர் பெற்றோர் உபாத்தியாயர் சங்கத்தாரின் 2வது ஆண்டு பத்திரிகையின் மொழிபெயர்ப்பு. விலை அணா 3. குவாலியரிலும் அடையாரிலும் உள்ள மேற்கூறிய சங்கத்தார் பிரசுரம் செய்தது.

குழந்தைகளை பழக்கும் முறைகளில் தற்காலத்தில் விசேஷமான மாறுபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன. அவர்களை அன்புடன் பழக்குபவனே உபாத்யாயன். கைகொண்டோ தடிகொண்டோ தாக்குபவன் அவ்வுயர்ந்த உத்திரவாதத்திற்கு அருகனல்லன். குழந்தைகள் இயற்கையில் சுறுசுறுப்புள்ளவர்கள், விஷயங்களை அறிய விருப்பமுள்ளவர்கள். சுறுசுறுப்புக்கு இடமும், கேள்விகளுக்கு விடையும் கொடுத்து அவர்களை அன்புடன் நடாத்துவதே ஏற்றமுறை. அங்ஙனம் செய்யின் எல்லாக் குழந்தைகளையும் நல்வழிப்படுத்தலாம்.

மேற்கூறிய கருத்துகளையும் அவைபோன்ற மற்ற அபிப்ராயங்களையும் எழுதிய ஆண்டுப் பத்திரிகையிது. இதை வாங்கிப்படித்து, மற்றவர்க்கும் படிக்கக்கொடுத்தல் சிலாக்கியமாகும்.

தமிழ்நாடு
240795

OFFICIAL NOTICE.

ISSUED BY THE GENERAL SECRETARY, INDIAN SECTION THEOSOPHICAL SOCIETY.

The following names of the COUNCILLORS OF THE INDIAN SECTION are circulated amongst the members of the Section in compliance with the resolutions passed by the Convention of 1920:—

COUNCILLORS.

1. General Secretary,
2. Joint General Secretary,
3. Assistant General Secretary,
4. Mr, C. R. Parthasarathi Iyengar, High Court Vakil, Chittoor.
5. Babu Damodar Prasad. B. Sc., Theosophical Society, Benares,
6. Mr. Jamnadas Dwarkadas, B. A., 11—13 Church Gate Street, Fort, Bombay,
7. Mrs. D. Jinarajadasa, Theosophical Society, Adyar,
8. Dr. V. S. Trilokekar, L. M & S. Kalbadevi Road, Bombay,
9. Prof P. K. Telang, M. A., L. L. B., Theosophical Society, Benares,
10. Babu Hirendra Nath Datta M. A., B. L., 139 Cornwallis Sreet Calcutta,
11. Justice. K.S. Chandrasekhara Iyer, Bangalore
12. Mrs. Chandrasekhar Iyer, c/o Justice K. S. Chandrasekhara Iyer, Bangalore.
13. Rai Bahadur Panda Baijnath, Madhav Sao's House, Kamacha, Benares,
14. Mr. Manjeri S. Rama Iyer, Vasantasrama Chalapuram. Calicut,
15. Mr. A. Rangaswami Iyer, Pleader, Hall of Theosophy Madura,